# இலங்கையில் அண்மைகாலங்களில் உருவாக்கப்பட்ட பொதுக் கொள்கைகளும் அதனாலான அரசியல் நெருக்கடிகளும்

**செ. புஸ்பகுமார்**

அரசியல் விஞ்ஞானப் பிரிவு, சமூக விஞ்ஞானங்கள் துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.

*siva7pk@gmail.com*

**ஆய்வுச் சுருக்கம்:** *அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளின் அபிவிருத்தி செயற்பாடானது அரசியல் முறைமையின் ஆரோக்கியத்தில் தங்கியுள்ளது. அரசாங்கத்தினால் உருவாக்கப்படுகின்ற கொள்கைகளானது அரசாங்கத்தின் எதிர்கால திட்டம், மக்கள் நலன்சார் செயற்பாடுகள், நாட்டினது அபிவிருத்தி என்பவற்றை வெளிப்படுத்துவதாக அமைகின்றன. இலங்கை போன்ற பல்லின நாட்டில் பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை எடுப்பது என்பது இலகுவான விடயம் ஒன்றல்ல. ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கம் பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை எடுத்து புதிய கொள்கையின் கீழ், புதிய பாதையை நோக்கி நாட்டை நகர்த்தி செல்ல திட்டமிட்டிருந்தது. இருப்பினும் அரசாங்கத்தினால் பொறுத்தமற்ற சூழ்நிலையில், முறையற்ற பொதுக் கொள்கை வகுப்பின் காரணமாக அரசியல் முறைமையில் நெருக்கடிகள் உருவாகின. குறிப்பாக வரிமுறையில் மாற்றங்களை ஏற்படுத்தல், இரசாயன உர இறக்குமதியினை தடை செய்தல், அரச சேவையில் புதிய நியமனங்களை வழங்குதல் என்பன நாட்டில் அப்போதைய சூழ்நிலையில் பொருத்தமற்ற பொதுக்கொள்கைகளாகவே அமைந்தன. இதன் தாக்கம் பொருளாதாரத் துறையிலும் பாரிய பின்னடைவை அடைய செய்ததோடு பலம் பொருந்திய அரசாங்கம் வீழ்ச்சி அடைவதற்கும் காரணமாக அமைந்தது. இஸ்த்திரமற்ற ஆட்சி, நாட்டு மக்களிடையே அமைதியின்மை, ஜனநாயகத்தின் இருப்பு கேள்விக்குறியாதல், நாட்டில் அடிக்கடி இடம்பெறுகின்ற வேலைநிறுத்தங்கள் என்பன நாட்டிற்கு நெருக்கடிகளை ஏற்படுத்தின. இவ்வாய்வானது இலங்கையில் அண்மைகாலங்களில் உருவாக்கப்பட்ட பொதுக் கொள்கைகள் என்ற வகையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட பொதுக்கொள்கைகள் அரசியல் ரீதியில் ஏற்படுத்திய நெருக்கடிகளை ஆராய்வதாக அமைந்துள்ளது. முக்கியமாக பொதுக்கொள்கையினுடைய முக்கியத்துவத்தினை உணர்த்தல் மற்றும் கொள்கையினை அமுல்படுத்தும் போது அதன் சாதக, பாதக விடயங்களை கவனத்தில் எடுத்து அமுல்படுத்துவதன் அவசியம் என்பன இவ்வாய்வினூடாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன.*

**பிரதான சொற்கள்** : அரசாங்கம், பொதுக் கொள்கை, அரசியல், அபிவிருத்தி

## 01. அறிமுகம்

தீர்மானங்களை நிர்ணயிக்கும் நிறுவனங்களின் மூலம் பொறுப்புள்ள செயற்பாட்டு நிகழ்ச்சிகளின் பொருட்டு வெளியிடுகின்ற அனுமானங்களின் நீடித்துநிற்கக் கூடிய தன்மை (continuity) ஒழுங்கு என்ற அடிப்படையில் கட்டியெழுப்பப்படுகின்ற தீர்மானங்கள் கொள்கை (ிழடைஉல) என அழைக்கப்படும். பொது மக்களின் நலன்களை கவனத்தில் கொண்டு அரசாங்கமானது காலத்திற்கு காலம் பல்வேறு பொதுக்கொள்கைகளை உருவாக்குகின்றது. பொதுக்கொள்கையானது தீர்மானம் ஒன்றினை குறிக்கின்றது. ஆனால் எல்லா தீர்மானங்களும் பொதுக்கொள்கையாக எடுத்துக்கொள்ள முடியாது. மாறாக பொதுக்கொள்கையானது ஒரு நாட்டு மக்களின் தேவைகளையும், விருப்பங்களையும் கருத்தில் கொண்டு அவர்களது நாளாந்த வாழ்க்கையினை மகிழ்ச்சிகரமானதாக நடாத்தி செல்வதற்கு அந்நாட்டு அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைதிட்டமாக உள்ளது (மோகனதாஸ், 2014). பொதுக்கொள்கை உருவாக்க செயல்முறையானது பல்வேறுபட்ட கட்டங்களை தாண்டி செயல்படுத்தப்படுகின்றது. இங்கு பொதுநலன் என்பது கவனிக்க வேண்டிய ஒரு விடயமாகும். இலங்கை சுதந்திரம் அடைந்த காலம் தொட்டு பல்வேறுப்பட்ட பொதுக்கொள்கைகளை ஆட்சிபீடம் ஏறும் அரசாங்கங்கள் உருவாக்கின. இவ்வாறு உருவாக்கப்பட்ட பொதுக் கொள்கைகளின் விளைவானது நடைமுறையில் பல எதிர்பாராத நெருக்கடிகளை தோற்றுவித்தன.

பொதுக் கொள்கையானது நாட்டினுடைய நீண்ட கால அபிவிருத்தி செயற்பாடுகளுக்கு அடிப்படையாக அமைவது அவசியமானதாகும். குறிப்பாக கொள்கைச் செயன்முறையானது

நிகழ்ச்சி நிரலைத் தயாரித்தல், கொள்கை உருவாக்கம், கொள்கை நடைமுறைப்படுத்தல், கொள்கை மதிப்பிடல், கொள்கை மறுசீரமைப்பு, கொள்கையை முடிவுறுத்தல் போன்ற படிமுறைகள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். ஆனால் இலங்கையில் அண்மைகாலங்களில் ஆட்சிபீடமேறிய அரசாங்கத்தின் முறையற்ற பொதுக்கொள்கை அமுலாக்கத்தின் காரணமாக இன்று நாடு பாரிய பொருளாதாரம் நெருக்கடிக்கும், அரசியல் இஸ்திரமற்ற தன்மைக்கும் மாறியுள்ளது.

பொதுக்கொள்கையினை வகுக்கின்ற போது நாட்டின் சூழ்நிலை, பொதுக்கொள்கையினால் ஏற்படும் விளைவுகள் என்பவற்றை கவனத்தில் எடுத்து சிறந்த நிபுணத்துவம் பெற்ற அரசியல் நிபுணர்களிடமிருந்து அறிவுரைகளைப் பெற்று நடைமுறைப்படுத்துவது அவசியமானதாகும். இதற்கு நீண்ட ஆராய்ச்சியும் செய்யப்படுவது சிறந்ததாக அமையும். இலங்கை வரலாற்றில் அரசாங்கங்களினால் அமுல்படுத்தப்பட்ட சில கொள்கையின் காரணமாகவே இலங்கையில் இன முரண்பாடு தோன்றியது. இன்று இலங்கையில் யுத்த காலங்காலத்தினை விடவும் மோசமான பொருளாதார மந்த நிலைக்கு அரசாங்கத்தினால் அறிமுகம் செய்யப்பட்ட சில கொள்கைகள் காரணமாகியுள்ளன.

இவ்வாய்வானது, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட முக்கிய பொதுக்கொள்கைகள் தொடர்பாகவும், அப் பொதுக்கொள்கைகளின் விளைவு அரச முறைமையில் எவ்வாறான தாக்கங்களை செலுத்தியுள்ளது என்பது குறித்து ஆராய்வதினை நோக்கமாகக் கொண்டுள்ளது. குறிப்பாக 2019க்கு பின்னரான புதிய அரசாங்கம் பொதுக் கொள்கைகளை உருவாக்கும் போது அதில் தாக்கம் செலுத்திய காரணிகள், அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட புதிய கொள்கைகள், அவற்றின் விளைவுகள் என்பன முக்கிய கவனம் கொண்டு ஆய்வுச் செய்யப்பட்டுள்ளது.

## 02. ஆய்வுமுறையியல்

இவ் ஆய்வானது நோக்கங்களை அடைவதினை கருத்தில் கொண்டு இரண்டாம் நிலை தரவுகளை மையமாகக் கொண்ட பண்புசார் ஆய்வாகும். ஆய்வுக்கான தரவுகள் ஆய்வுத் தலைப்புடன் தொடர்புடைய நூல்கள், ஆய்வு கட்டுரைகள், இணையதளங்கள் என்பவற்றில் இருந்து பெறப்பட்டு புதிதாக உருவாக்கப்பட்ட பொதுக்கொள்கைகள் , வரி முறைமைகள், பொதுக் கொள்கையின் தாக்கம் போன்ற விடயங்களை மையப்படுத்தி ஆராயப்பட்டுள்ளது. இருப்பினும் நேரடி அவதானிப்பின் மூலம் பெறப்பட்ட முதலாம் நிலை தரவுகளும் ஆய்வில் சேர்க்கப்பட்டுள்ளன. பெறப்பட்ட தரவுகள் விபரண பகுப்பாய்வு அணுகுமுறையினைப் பயன்படுத்தி பகுப்பாய்வுச் செய்யப்பட்டு முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

## 03. கலந்துரையாடலும் முடிவுகளும்

அரசாங்கத்தால் உருவாக்கப்படுகின்ற பொதுக் கொள்கைகளானது நாட்டினுடைய எதிர்காலத்தில் பெரிதும் துணைப்புரிவனவாக அமைகின்றன. ஆட்சிபீடத்தில் உள்ள அரசாங்கமானது தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்ட அனைத்து விடயங்களையும் பொதுக் கொள்கைகளாக உருவாக்கிவிடமாட்டாது. மாறிவரும் உலக ஒழுங்கில் நடைமுறை சூழ்நிலைகளை கருத்தில் கொண்டு பொதுக் கொள்கைகளை உருவாக்குவது அரசாங்கத்தின் கடமையாகும். அரசாங்கமானது பொதுக் கொள்கைகளை உருவாக்கும் போது அரசாங்கத்தினால் உருவாக்கப்படும் பொதுக் கொள்கைகளில் சில மாற்றங்களை நடைமுறை விடயங்கள் மாற்றி விடலாம். அவ்வாறே 2019இன் இறுதி பகுதியிலும் ஏற்பட்டது.

### 3.1. 2019 இன் பின்னர் இலங்கையில் பொதுக் கொள்கையில் மாற்றத்தை ஏற்படுத்திய காரணிகள்

2019 ஜனாதிபதி தேர்தலின் பின்னர் இலங்கையில் தேசிய பாதுகாப்பு என்ற விடயம் முக்கியத்துவம் அடைய தொடங்கியது. 2019 ஏப்ரல் 21 மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டு தாக்குதலின் காரணமாக நாட்டினுடைய தேசிய பாதுகாப்பு குறித்த கேள்வி பலர் மத்தியில் எழத்தொடங்கியது. இதனை சரியாக பயன்படுத்திக் கொண்ட ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி ஜனாதிபதி தேர்தலினை குறிவைத்து தேசிய பாதுகாப்பினை பாதுகாக்க பொருத்தமான நபர் என்ற வகையில் முன்னால் பாதுகாப்பு செயலாளர் கோட்டாபய ராஜபகஷ அவர்களை ஜனாதிபதி வேட்பாளராக நிறுத்தியது. ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தாக்குதல் 2019 ஏப்ரல் 21 ஞாயிற்றுக்கிழமை காலை 8.45 தொடக்கம் 9.05 வகையான காலப்பகுதிக்குள் தேவாலயத்திலும், பிரபல ஹோட்டல்களிலும் குண்டு

தாக்குதல் மேற்கொள்ளப்பட்டு 253 பேர் உயிரிழக்கவும் நேரிட்டது (Zahir khan, 2021). இதில் பலர் தமது உடற்பாகங்களை இழந்து இன்றும் அந்த வடு மாறாமல் இருக்கின்றனர். இவ்வாறான சூழ்நிலையில் தேசிய பாதுகாப்பினை முக்கியத்துவப்படுத்தி புதிய அரச தலைவர் பதவி ஏற்றார்.

ஜனபதிபதி தேர்தலின் பின்னர் 2019 நவம்பர் 21 அன்று முன்னால் ஜனாதிபதி மஹிந்த ராஜபகஷ புதிய பிரதமராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபகஷ அவர்களினால் நியமிக்கப்பட்டார் (Meera, 2019). இந்நிலையில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி சட்ட, நிர்வாக துறைகள் சார் அதிகாரங்களை பெற்றுக் கொண்டது. இவ்வாறு புதிய ஆட்சி மாற்றத்துடன் பலம் பொருந்திய அரசு முறைமையிற்குள் பல்வேறுபட்ட பொதுக் கொள்கை வேலை திட்டங்கள் அறிமுகம் செய்யப்பட்டன. இருப்பினும் இவற்றில் தாக்கத்தினை ஏற்படுத்திய முக்கிய காரணியாகவும், இன்று அரசியல், பொருளாதாரம் நெருக்கடிக்குப் பிரதான காரணியாகவும் கொவிட்-19 தாக்கம் காணப்படுகின்றது. இப் பெருந் தொற்றினால் இலங்கை உட்பட சர்வதேச நாடுகள் பலவும் தொற்றின் தாக்கத்திற்கு உள்ளாகின. இலங்கையில் 2020 மார்ச் 11 க்கு பின்னர் இலங்கையில் கொவிட்-19 பெருந்தொற்றின் தாக்கம் அதிகரிக்க தொடங்கியது (Rameez, 2020).

2020 ஆகஸ்ட் 05 நடைபெற்ற 16வது பொதுத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்று தேர்தலில் வெற்றி பெற்றது. குறிப்பாக ஆட்சி அதிகாரத்தினை வைத்திருந்த ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்கு கொவிட்-19 பெருந்தோற்றின் தாக்கத்தோடு இத் தேர்தல் நடைப்பெற்றமையினால் அதிகாரத்தை அவ்வாறே தக்க வைத்துக்கொள்வதற்கு வாள்ப்பாக அமைந்தது (DRI, 2021). இருப்பினும் இந்த அரசாங்கம் பெருந்தொற்றினைக் கட்டுப்படுத்தி அதனை குறைப்பதற்கு பல்வேறுபட்ட பொதுக் கொள்கையை ஏற்படுத்த வேண்டிய தேவை ஏற்பட்டது. ஊரடங்கு சட்டம், அவசரகால சட்டத்தினை நடைமுறைப்படுத்தல், தனிமைப்படுத்தல் முகாம்கள் அமைத்தல், கொவிட்-19 தடுப்பூசிகளை பெற்று மக்களுக்கு செலுத்துதல், வறுமையில் வாழும் மக்களுக்கு நிவாரணங்களை வழங்குதல் போன்ற செயற்பாடுகளுக்கான கொள்கைகள் உடனடியாக அமுல் செய்யப்பட்டது. நாட்டினுடைய அபிவிருத்தி என்பதற்கு முக்கியத்துவம் அளிக்காமல் சுகாதார சேவைக்கான கொள்கைகள் உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது.

கொவிட்-19 பெருந்தொற்றின் தாக்கமும், ஏற்கனவே ஏப்ரல் 21 உயிர்த்த ஞாயிறு தற்கொலை குண்டு தாக்குதலின் பாதிப்பும் இலங்கை அரசினுடையப் பொதுக் கொள்கை உருவாக்கத்தில் தாக்கத்தை செலுத்தின. இதன் காரணமாக சுற்றுலாத்துறையும் வெகுவாக பாதிக்க ஆரம்பித்தது. சுற்றுலாத்துறையின் பாதிப்பு இலங்கையினுடைய அரசியல் பொருளாதாரத்தில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தவும் தொடங்கியது. சுற்றுலாத்துறையினுடைய பாதிப்பானது பொருளாதாரத்தில் தாக்கத்தை செலுத்த அரசு தங்களுடைய பொதுக்கொள்கையினை சுற்றுலாத்துறையின் பக்கம் அதிக கவனம் செலுத்த வேண்டிய தேவையும் ஏற்பட்டது. குறிப்பாக வெளியுறவுக் கொள்கை தொடர்பில் அதிக முக்கியத்துவம் அளித்தல், உள்ளுர் சுற்றுலாப்பயணிகளின் வருகையை அதிகரிக்க அரசாங்கம் புதிய கொள்கைகளை உருவாக்குதல், இலங்கைத் தொடர்பில் சர்வதேச அளவில் இருந்த அச்சத்தினை நீக்க வேண்டிய தேவையும் அரசாங்கத்திற்கு ஏற்பட்டது.

பண மதிப்பின் வீழ்ச்சியும் இலங்கையிடைய பொதுக்கொள்கையில் தாக்கத்தை செலுத்திய ஒன்றாக காணப்படுகின்றது. மேலும் அத்தியாவசியமற்ற சில பொருட்களுக்கான இறக்குமதி தடையினை அரசாங்கம் விதிக்க ஆரம்பித்தது (sirimanna, 2022). இந்த இறக்குமதி தடையானது இலங்கையினுடைய பொதுமக்கள் மத்தியில் சில அதிருப்திகளையும் ஏற்படுத்த தொடங்கியது. இவ்வாறு இறக்குமதிகளின் தடையானது உள்ளுர் பொருட்களுடைய கேள்வியினை அதிகரிக்க செய்ததோடு உள்நாட்டு உற்பத்திகளின் விலையும் எண்ணிலடங்காத வகையில் உயர செய்தன. அதனோடு அல்லாமல் வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்வதற்கு அதிக பணம் செலுத்த வேண்டிய தேவையும் அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. ஆதலால் புதிய பொருளாதாரக் கொள்கை சார்ந்த கொள்கையினை அரசாங்கம் வகுக்க வேண்டியதாகியது உற்பத்தி விடயங்களில் திடீரென்று ஒரு கொள்கையை வகுத்து நடைமுறைப்படுத்துவது சிக்கலான விடயம் ஒன்றாகும், என்பதோடு அந்தக் கொள்கையை வகுத்து அதனை நடைமுறைப்படுத்துவதற்கு நீண்ட கால செயல்திட்டம் ஒன்று

அவசியமாகின்றது. இந்த நீண்ட கால செயற்திட்டம் இலங்கை அரசிடம் காணப்படாமையே இலங்கையினுடைய பொருளாதார மந்த நிலைக்கு காரணமாக கூறப்படுகின்றது.

### 3.2. புதிய அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட பொதுக்கொள்கைகள்

அரசாங்கத்தின் செயற்பாடுகளை முன்னோக்கி கொண்டுச் செல்வதற்காக அரசாங்கத்தினால் சில கொள்கைகள் உருவாக்கப்பட்டன. முக்கியமாக மக்களுக்கு நன்மைகளை பெற்றுதரவென உருவாக்கப்பட்ட இக் கொள்கைகள் நாட்டினது எதிர்காலத்தை பாதிப்பதாக அமையப்பெற்றது.

- **நாட்டின் வரி முறைமையில் மாற்றத்தை ஏற்படுத்தல்**

புதிய அரசாங்கம் பதவியேற்றதனை தொடர்ந்து பெருமதி சேர்க்கப்பட்ட சேவைகள் வரி (VAT) 15% இல் இருந்து 8% குறைக்க அமைச்சரவை அனுமதி அளித்து 2019 டிசம்பர் 1 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் அமைச்சரவை அனுமதி அளித்தது (Richard Asquith, 2019). இதனோடு தேசத்தை கட்டியெழுப்பும் வரி (NBT), உழைக்கும்போதே செலுத்தும் வரி (Payee Tax), வட்டிக்கான பிடித்து வைத்தல் வரி (With Holding Tax) பற்று வரி (Debit Tax) ஆகியவற்றை உடன் அமுலாகும் வகையில் இரத்து செய்வதற்கு கொள்கை வகுக்கப்பட்டது. இந்த வரிமுறையானது நவம்பர் 2016 ஆம் ஆண்டு 11% இல் இருந்து 15% ஆக உயர்த்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

- **அரச சேவையில் புதிய நியமனங்களை வழங்குதல்**

பொதுஜன பெரமுன அரசாங்கத்தினால் ‘‘சுபிட்சத்தின் நோக்கு’’ கொள்கை பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ‘‘நாட்டுக்காக வேலை’’ கலாசாரத்தை உருவாக்குவதற்காக 60,000 பட்டதாரிகளை அரச சேவையில் இணைத்துக் கொள்ளும் வகையில் கொள்கை வகுக்கப்பட்டது. இதனோடு அரசத் துறைகளில் ஒரு லட்சம் பேர் கல்வி சாரா வழிமுறைகளில் அரச தொழிலுக்காக அமைக்கும் திட்டமும் அரசாங்கத்தினால் வகுக்கப்பட்டது (LBO, 2020). இந்தத் திட்டத்தின் மூலமாக வேலையற்ற பிரச்சனையினை தீர்க்கவும், வறுமையின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு பொருளாதார ரீதியில் முன்னேற்றம் அடைவதற்கு வழிவகுக்கவும் வாய்ப்பாக அமைந்தது. இதன்படி 2020 செப்டம்பர் 3 அன்று 50,177 பட்டதாரிகளுக்கு நியமனம் வழங்கப்பட்டது. இதில் 38,760 பேர் பெண்களாவார். ஒரு வருட காலப் பயிற்சி நிறைவின் பின்னர் கிராமிய மற்றும் தோட்டப் பாடசாலைகள், விவசாய சேவை நிலையங்கள், பிரதேச நீர்ப்பாசன அலுவலகங்கள், வனஜீவராசிகள் அலுவலகம், சுதேச ஆயுர்வேத வைத்தியசாலைகள், கிராமிய வைத்தியசாலைகள், மருந்தகங்கள், சிறு ஏற்றுமதி பயிர்ச் செய்கை அலுவலகம் போன்ற கிராமிய பிரிவுடன் நேரடியாக தொடர்புள்ள நிறுவனங்களுக்கு இணைத்துக் கொள்ளத் திட்டமிடப்பட்டது (TamilTwin, 2020).

- **20வது அரசியல் யாப்பு திருத்தம்**

இலங்கையில் 1978 இரண்டாம் குடியரசு அரசியல் யாப்பிற்கு ஒவ்வொரு காலத்திற்கும் ஆட்சி பீடம் ஏறும் அரசாங்கத்தினால் புதிய புதிய சீர்த்திருத்தங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அவ்வகையில் ஜனாதிபதியினுடைய அதிகாரத்தை சற்று உயர்த்தும் வகையில் 20 வது அரசியல் யாப்பு சீர்த்திருத்தமானது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டது. குறிப்பாக ஜனாதிபதியினுடைய அதிகாரத்தை கூட்டுதல், இரட்டை பிரஜாவுரிமை கொண்ட நபரும் தேர்தலில் போட்டியிடுதல், பாராளுமன்ற பேரவையினை மீண்டும் நிறுவுதல் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் இந்த சீர்த்திருத்தத்தில் உள்வாங்கப்பட்டு இருந்தது. குறிப்பாக 19வது சீரத்திருத்தத்தில் காணப்பட்ட விடயங்களுக்கு மாறான சில விடயங்கள் 20வது அரசியல் யாப்பு சீர்த்திருத்தத்தில் இருந்தமை குறிப்பிடத்தக்கது. இச் சீர்த்திருத்தம் தொடர்பில் பல்வேறுபட்ட விவாதங்கள் இடம் பெற்ற போதிலும் பாராளுமன்றத்தினால் மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் இச் சீர்த்திருத்தம் நடைமுறைப்படுத்தப்பட்டது. இதன் விளைவு ஆளும் அரசாங்கத்திற்கு மேலும் வலு சேர்ப்பதாக அமைந்ததோடு கொள்கை உருவாக்கத்தில் ஜனாதிபதிக்கு அதிகாரம் அளிப்பதாகவும் இச் சீர்த்திருத்தம் அமைந்தது.

- **கொவிட்-19 தொற்றுநோய்க்கான சுகாதாரக் கொள்கை**

சுகாதாரத் துறையில் முக்கிய சில கொள்கைகளை வகுக்க வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. குறிப்பாக கொவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக

பாதிக்கப்பட்ட மக்களுக்கு சுகாதார ரீதியாக பாதுகாப்பினை வழங்க வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு ஏற்பட்டது. இதன்படி அரசாங்கத்தால் வகுக்கப்பட்ட நீண்ட கால கொள்கைகள் பல தடைப்பட்டதுடன் சுகாதாரத் துறைக்கான புதிய சில கொள்கைகள் உருவாக்க வேண்டிய தேவை ஏற்பட்டது. இலங்கை ராணுவத்தினை மையமாகக் கொண்ட பெருந்தொற்றை ஒழிப்பதற்கான செயலணியினை ஜனாதிபதி உருவாக்கினார். இதில் முக்கிய சுகாதார நிபுணர்கள், ராணுவ முக்கிய பங்குதாரர்கள், வைத்தியர்கள் ஆகியோர் மற்றும் உதவி மற்றும் சுகாதார ஊழியர்கள் என்பவர்கள் உள்ளடங்கி இருந்தனர் (Yamei, 2020). அதனோடு பெருந்தொற்றை கட்டுப்படுத்துவதற்கான வெளிநாடுகளுடனான தொடர்பு, மக்கள் மத்தியில் பெருந்தொற்று பரவாமல் இருப்பதற்கான வேலை திட்டங்கள் என பல்வேறு கொள்கைகள் அரசாங்கத்தினால் வகுக்கப்பட்டன.

- **இரசாயன உர இறக்குமதியினை தடைச் செய்தல்**

இலங்கை அரசாங்கம் 2021 ஏப்ரல் மாதமளவில் விவசாய இரசாயன உரம், பூச்சிக்கொல்லிகள் இறக்குமதி செய்வதற்கு, பயன்படுத்துவதற்கு தடைவிதித்து அதி விசேட வர்த்தமாணியினை வெளியிட்டது. இயற்கை பசளைகளை அதிகம் பயன்படுத்தி நாட்டிற்கான கிருமிகளற்ற உணவுகளை வழங்குவதற்கு அரசாங்கம் முனைப்போடு இக்கொள்கையினை நடைமுறைப்படுத்தியது (Science Speaks, 2022). ''நச்சு அல்லாத உணவுக்கான மக்களின் உரிமையை அரசாங்கம் உத்தரவாதம் செய்ய வேண்டும். அடுத்த 10 ஆண்டுகளில் இலங்கையில் விவசாயத்திற்கு முழுமையாக சேதன உரங்களை பயன்படுத்த அந்த உற்பத்தியை துரிதப்படுத்த வேண்டும்'' என ''சுபிட்சத்தின் நோக்கு'' கொள்கை பிரகடனத்தில் உறுதியளிக்கப்பட்டதன் அமைவாக இக்கொள்கை நடைமுறைப்படுத்தப்பட்டது. அதனோடு இரசாயன உர பாவணைக்கு செலவு செய்யப்படும் பணத்தினை குறைப்பதற்கும் இத்திட்டம் வாய்ப்பாக அமையும் என்ற வகையில் நடைமுறைப்படுத்தப்பட்டது (Colombopage, 2021).

### 3.3. பொதுக் கொள்கை <u>உருவாக்கத்தினாலான அரசியல்</u> நெருக்கடிகள்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட பொதுக் கொள்கைகளின் விளைவுகளானது நாட்டின் அபிவிருத்தியை ஸ்தம்பிதம் அடையச் செய்துள்ளது. அது மட்டுமின்றி அரசியல், பொருளாதார, சமூக ரீதியில் பல்வேறு நெருக்கடிகளையும் தோற்றுவித்தன. குறிப்பாக இதில் அரசியல் முறைமையில் ஏற்பட்ட நெருக்கடிகளானது பாரிய விளைவுகளை ஏற்படுத்தியது.

- **அரசின் கடன் சுமை அதிகரித்தல்**

இலங்கை அரசிற்கு பொருளாதாரத்தில் ஏற்பட்ட பாதிப்பானது அரசியல் விடயங்களிலும் தாக்கத்தை செலுத்த ஆரம்பித்தது. குறிப்பாக நாட்டினது கடன் சுமை மேலும் அதிகரிக்க தொடங்கியது. இது அரசியல் மட்டங்களில் பல்வேறுப்பட்ட சவால்களை ஏற்படுத்தியது. அரசினால் உருவாக்கப்பட்ட முறையற்ற பொதுக்கொள்கையின் காரணமாக நாட்டினது வருவாய் குறைவடைந்து கடன் சுமை மேலும் அதிகரிக்கத் தொடங்கியது. அண்மைக்கால தரவுகளின் படி இலங்கையின் வெளிநாட்டு கடன் 35 பில்லியன் அமெரிக்க டொலர்களாக குறிப்பிடப்பட்டுள்ளது (economynext, 2022). இலங்கை தனது இருதரப்பு கடனில் பெரும்பகுதியை ஜப்பானுக்கும் சீனாவுக்கும் செலுத்த வேண்டியுள்ளது. இதில், சீனாவுக்கு செலுத்த வேண்டிய கடன் 3.5 பில்லியன் டொலர்கள் என்பதுடன், அவர்களிடமிருந்து பெறப்பட்ட வர்த்தகக் கடன்களையும் சேர்த்துப் பார்க்கும் போது, இலங்கையின் மொத்த வெளிநாட்டுக் கடனில் ஐந்தில் ஒரு பங்கு சீனாவிடம் உள்ளமை குறிப்பிடத்தக்கது (adaderana, 2022).

- **அரசாங்கத்தின் கொள்கைகள் முறையாக நடைமுறைப்படுத்த முடியாமை**

சட்ட, நிர்வாகத் துறைகளில் அதிகாரம் பெற்ற பலம் பொருந்திய ஆட்சி முறையின் கீழ் பல்வேறுபட்ட தூர நோக்குடைய கொள்கைகள் வகுக்கப்பட்டுச் சில கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. குறிப்பாக தனியார் துறை ஊழியர்களின் குறைந்தபட்ச சம்பளத்தை 10,000 ரூபாவில் இருந்து 12,500 ஆக அதிகரித்தமை (manthri, 2021), வரிவிதங்களில் மாற்றங்களை ஏற்படுத்தல், சுற்றுலாத்துறை சார்ந்த அபிவிருத்திகளை மேற்கொள்ளுதல், அப்போது நடைமுறையில் இருந்த எரிபொருள் சூத்திரத்தை நீக்குதல்,

வேலையற்ற இளைஞர்கள் மற்றும் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்பினை பெற்றுக் கொடுத்தல் இவ்வாறான சில கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்பட்டன. ஆனால் நாட்டினுடைய பொருளாதார மந்த நிலை மற்றும் கொவிட்-19 பெருந்தொற்று காரணமாக சில கொள்கைகள் ஆரம்பிக்கப்பட்டு வைத்ததாக மட்டுமே இருந்தன. குறிப்பாக தற்போதுள்ள பல்கலைகழக கல்லூரிகளின் எண்ணிக்கையை 20 ஆக அதிகரிக்கும் திட்டம், தேசிய இளைஞர் நிதியத்தினை நிறுவுதல், தொழிலாளர் இழப்பீட்டு கட்டளை சட்டத்தில் திருத்தங்களை கொண்டு வருதல், சில பாதை அபிவிருத்தி திட்டங்களை மேற்கொள்ளுதல் போன்ற திட்டங்கள் இடையில் நிறுத்தப்பட்டதாக உள்ளது அதனோடு சுகாதாரத்துறைக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய தேவையும் ஏற்பட்டது.

- **அரசாங்கத்திற்கெதிரான மக்கள் போராட்டங்கள்**

இரசாயன உரங்கள் மற்றும் விவசாய இரசாயனப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு ஜனாதிபதி கோட்டாபய இராஜபகஷ எதேச்சதிகாரமாக தடை விதித்ததை எதிர்த்து நாடு முழுவதும் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் பிரச்சாரம் செய்து போராட்டங்களை நடத்தினர். நெல் வயல்கள், பண்ணைகள் மற்றும் வீதிகளில் நடந்த இந்த ஆர்ப்பாட்டங்களில் நெல், காய்கறிகள், தேயிலை மற்றும் பழங்கள் உற்பத்தியில் ஈடுபடும் அனைத்து தரப்பு மக்களும் கலந்து கொண்ட அதே வேளை, ‘‘இரசாயன உரங்கள் மீதான தடையை உடனடியாக நீக்கு!’’, ‘‘சுபீட்ச நோக்கு-விவசாயிகள் வீதியில்!’’, ‘‘விவசாய நிலங்களை கூட்டுத்தாபனங்களுக்கு காவுகொடுக்காதே’’ போன்ற சுலோகங்கள் அடங்கிய அட்டைகளும், பதாதைக்களும் இந்த பிரச்சாரத்தின் போது காட்சிப்படுத்தப்பட்டிருந்தன (wsws, 2021).

2022 ஏப்ரல் 9ஆம் தேதி கோட்டாபய ராஜபகஷ ஜனாதிபதி பதவியில் இருந்து இராஜினாமா செய்யுமாறு வலியுறுத்தி இளைஞர் குழுவால் ஆரம்பிக்கப்பட்ட காலி முகத்திடல் போராட்டமானது இலங்கையில் இன, மத, மொழி என்பவற்றைக் கடந்து அனைத்து தரப்பினராலும் மேற்கொள்ளப்பட்ட போராட்டமாக அமைந்தது. குறிப்பாக இலங்கையில் அரசமுறையில் மாற்றத்தை ஏற்படுத்திய மக்கள் போராட்டமாகவும் இது காணப்பட்டது. குறிப்பாக நாட்டில் நடைமுறைப்படுத்தப்பட்ட முறையற்ற பொருளாதாரக் கொள்கை உருவாக்கம், அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை அதிகரிப்பு, அத்தியாவசிய பொருட்களுக்கான தட்டுப்பாடு என்பவற்றை முன்னிலைப்படுத்தி இப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டு வந்தது (Godwin, 2022). குறிப்பாக இப் போராட்டம் சிவில் சமூக அமைப்புகள், சமூக ஆர்வலர்கள், பல்கலைக்கழகம் மாணவர்கள், தொழிற்சங்கங்கள், அரசியல் கட்சிகள், மத அமைப்புகள் என்பவற்றின் ஒத்துழைப்போடு பெருந்திரளான மக்களை மையப்படுத்திய போராட்டமாக மேற்கொள்ளப்பட்டது. இந்தப் போராட்டங்களினுடைய விளைவு அரசியல்வாதிகளுக்கு பெரும் சவாலாக அமைந்தது. குறிப்பாக அவர்களது உடமைகள் போராட்டக்காரர்களால் அழிக்கப்பட்டமை அவர்களுக்கு தங்களது பாதுகாப்பு மீதான பயத்தினை ஏற்படுத்தியதோடு பொறுப்புடைமையினையும் ஏற்படுத்தியது.

- **ஆட்சி முறைமையில் ஏற்பட்ட திடீர் மற்றங்கள்**

  - **அமைச்சரவை மாற்றம்**

இலங்கையில் 2021க்கு பின்னர் அமைச்சரவையில் திடீர் மாற்றங்கள் ஏற்பட தொடங்கின. குறிப்பாக 2021 ஜூலை 8 ஆம் திகதி பசில் ராஜபகஷ தேசிய பட்டியல் ஊடாக பாராளுமன்ற உறுப்பினராக சத்தியப் பிரமாணம் செய்த நிலையில், பின்னர் நிதி அமைச்சராகவும் பொறுப்பேற்றார். ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் ஜயந்த கெட்டகொட பதவி விலகியதையடுத்து ஏற்பட்ட வெற்றிடத்திற்கே பசில் ராஜபகஷ நியமிக்கப்பட்டார். நாட்டில் ஏற்பட்ட பொருளாதார மற்றும் அரசியல் நெருக்கடியையடுத்து நிதியமைச்சர் பதவியிலிருந்து பசில் ராஜபகஷ விலகியிருந்தார். 2021 ஆகஸ்ட் 16 அன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபகஷ தலைமையிலான அமைச்சரவையில் பிரதானமான ஏழு அமைச்சரவை மாற்றங்கள் ஏற்பட்டன. முக்கியமாக சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி போக்குவரத்து அமைச்சராகவும், ஹெகலிய ரம்புக்வெல சுகாதார அமைச்சராகவும் மாற்றப்பட்டுள்ளதோடு வெளி விவகார அமைச்சு, கல்வி அமைச்சு, மின் சக்தி அமைச்சு, வெகுஜன ஊடக அமைச்சு, அபிவிருத்தி ஒருங்கிணைப்பு மற்றும்

மேற்பார்வை அமைச்சு போன்ற துறைகளில் அமைச்சரவை மாற்றங்கள் ஏற்பட்டன (Colombopage, 2021). இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 47 (II) (டி) பிரிவின் கீழ் ஜனாதிபதி கோட்டாபய ராஜபகஷவிற்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் பிரகாரம் 2022 மார்ச் 03 அன்று கைத்தொழில் அமைச்சர் விமல் வீரவன்ச மற்றும் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில ஆகியோர் தமது அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டனர்.

அமைச்சர்களான விமல் வீரவன்ச மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் அமைச்சுப் பதவிகளில் இருந்து நீக்கப்பட்டதை அடுத்து, பல அமைச்சுக்கள் மாற்றியமைக்கப்பட்டன. புதிய எரிசக்தி அமைச்சராக காமினி லொகுகேவும், புதிய மின்துறை அமைச்சராக பவித்ராதேவி வன்னியாராச்சியும் இன்று மாலை ஜனாதிபதி செயலகத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபகஷ முன்னிலையில் பதவிப்பிரமாணம் செய்துகொண்டனர். முன்னதாக, முன்னாள் இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவும் அவரது இலாகாவிலிருந்து நீக்கப்பட்டார் (dailynews, 2022).

இலங்கையின் பிரதமராக ரணில் விக்ரமசிங்கே பதவியேற்றுக்கொண்ட பிறகு 2022.05.23 அன்று 9 அமைச்சர்கள் பதவி ஏற்றுக் கொண்டார்கள். துறைமுகங்கள் கப்பல்கள் விமான சேவைகள் துறை அமைச்சராக நிமில் சிறிபால டி சில்வா அவர்களும், சுசில் பிரேமஜெயந்த அவர்கள் கல்வித்துறை அமைச்சராகவும், கெஹெலிய ரம்புக் வெல்ல சுகாதாரத்துறை அமைச்சராகவும், விஜேதாச ராஜபகஷ நிதி துறை அமைச்சராகவும், ஹரின் பெர்னான்டோ சுற்றுலா துறை அமைச்சராகவும் பதவி பொறுப்பு ஏற்றுக் கொண்டார்கள். ரமேஷ் புத்திரன்,மனுஷ நாணயக்கார, நவீன் பெர்னான்டோ, டிரான் அலஸ் ஆகியோரும் அமைச்சர்களாக பதவி ஏற்றுக்கொண்டார்கள் (Farzan, 2022). இந்த நியமனத்திற்கு முன்னர் பல அமைச்சர்கள் தங்களது அமைச்சு பதவிகளை இராஜினாமா செய்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. தற்போது ஜனாதிபதி, பிரதமர் உட்பட இலங்கையில் 20 அமைச்சர்கள் அமைச்சரவையில் உள்ளனர்.

- **பிரதமர் பதவியினை இராஜினாமா செய்தமை**

இலங்கையில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியின் காரணமாக ஏற்பட்ட மக்கள் போராட்டத்தினால் ஜனாதிபதி மற்றும் பிரதமர் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டது. இதன் விளைவாக 2022 மே 9 அன்று பிரதமர் பதவியில் இருந்து தாம் விலகுவதாக பிரதமர் மஹிந்த ராஜபகஷ அறிவித்தார். இதன்படி மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த பலம் பொருந்திய அரசாங்கத்தின் தலைவர் அப் பதவியிலிருந்து அகற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது (Aljazeera, 2022). இதன் பின்னர் இலங்கையின் புதிய பிரதமராக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க 2022 மே 12 அன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபகஷ அவர்களினால் நியமிக்கப்பட்டார். இவர் இதற்கு முன்னர் ஐந்து முறை இலங்கையின் பிரதமராக தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது (adaderana, 2022). இலங்கையில் ஆட்சி முறைமையில் ஏற்பட்ட திடீர் மாற்றங்களினால் புதிய ஜனாதிபதியாக ரணில் விக்ரமசிங்க தெரிவு செய்யப்பட்டதை அடுத்து ஏற்பட்ட பிரதமர் வெற்றிடத்திற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தினேஷ் குணாவர்தன புதிய பிரதமராக 2002 ஜூலை 22 அன்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களின் நியமிக்கப்பட்டார் (hindustantimes, 2022). இவ்வாறு இலங்கையில் கடந்த காலங்களில் ஆட்சி மாற்றங்கள் பல்வேறு மட்டங்களில் இடம்பெற்று இருப்பதை அவதானிக்க கூடியதாக இருந்தது.

- **ஜனாதிபதி தனது பதவியினை இராஜினாமா செய்தமை**

மக்களின் தொடர்ச்சியான போராட்டத்தினால் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபகஷ தாம் ஜனாதிபதி பதவியில் இருந்து இராஜினாமா செய்வதாக சிங்கப்பூரிலிருந்து மின்னஞ்சல் மூலமாக 2022 ஜூலை 14 அன்று இராஜினாமா கடிதத்தினை இலங்கைக்கு அனுப்பி வைத்தார். குறிப்பாக இலங்கையின் யுத்த முடிவுக்கு பிரதான காரணமாக இருந்த பலம் பொருந்திய ஒரு தலைவர் மூன்று மாத கால மக்கள் போராட்டத்தின் காரணமாக தனது பதவியை இராஜினாமா செய்தமை சர்வதேச நாடுகள் பலவற்றிலும் பிரதான பேசு பொருளாக மாறியது (Skandha, 2022). பின்னர் ஏற்பட்ட ஜனாதிபதி வெற்றிடத்திற்கான பதில்

ஜனாதிபதியாக அப்போதைய பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவு செய்யப்பட்டார். 2022 ஜூலை 20 அன்று நடைபெற்ற ஜனாதிபதி பதவிக்கான பாராளுமன்ற வாக்கெடுப்பில் ரணில் விக்ரமசிங்க இடைக்கால ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டு 2022 ஜூலை 21 அன்று புதிய ஜனாதிபதியாக பதவி ஏற்றுக்கொண்டார். இவர் அப்போதைய நிலையில் 6 முறை பிரதமர் பதவி வகித்த நபர் என்ற பெருமையினையும் கொண்டிருந்தார் (Thehindu, 2022).

- **இலங்கையின் ஜனநாயகம் கேள்விக்குள்ளானமை**

ஜனநாயகம் என்பது ஒரு நாட்டிற்கு அவசியமான ஒன்றாகும். ஜனநாயகத்தை மீறுகின்ற செயற்பாடு சர்வதிகாரத்திற்கு வழி வகுக்கின்றது. இலங்கையின் அண்மைக்கால அரசியல் மக்கள் பலத்தினை கொண்ட ஒரு சர்வதிகார ஆட்சியாகவே பார்க்கப்பட்டது. அதாவது பாராளுமன்றில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையும், அரசின் தலைவராகவும் ஒரு கட்சியை சேர்ந்த உறுப்பினர்கள் இருக்கின்ற போது அவர்களின் ஆதிக்க அரசியல் என்பது அங்கு உயர்ந்ததாகவே காணப்படுகின்றது. நடைமுறையில் இலங்கையிலும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் செயற்பாடும் அவ்வாறே அமைந்து. இந் நிலையில் முறையற்ற பொருளாதாரக் கொள்கையினால் ஏற்பட்ட நெருக்கடிக்களுக்குப் பின்னர் ஜனநாயகத்தின் நிலை என்ற வகையில் பார்க்கின்றபோது, போராட்டங்கள் நடத்துவதற்கு மக்களுக்கு உரிமை இருந்த நிலையிலும் தகுந்த காரணங்களின்றி ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்பட்டமை, சமூக ஊடங்கள் முடக்கப்பட்டமை, அரச அதிகாரத்தை முறையற்றதாக பயன்படுத்தியமை, போராட்டங்களை மேற்கொண்ட மக்களை மனிதாபிமானமற்ற முறையில் அடக்கியமை, மக்களின் நன்மைகளை கவனத்தில் கொள்ளாமல் செயற்படுதல் போன்ற விடயங்கள் ஜனநாயகத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது. அது மட்டுமன்றி தற்போதைய அரசு தலைவராகவுள்ள ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க பாராளுமன்ற உறுப்பினராக வருவதற்கு கூட மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒரு நபராவார். அவர் தேசிய பட்டியலின் மூலம் பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டு இன்று அரசுத் தலைவராகவும் மாறியுள்ளார். இது இலங்கையில் ஜனநாயகத்தின் நிலை என்ன என்பதை வெளிக்காட்டுவதாக உள்ளது.

**04. முடிவுரை**

இலங்கையில் அண்மைகாலங்களில் உருவாக்கப்பட்ட பொதுக் கொள்கைகளினால் அரசியல் ரீதியில் ஏற்பட்ட நெருக்கடிகளை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வானது, ஸ்ரீ லாங்கா பொதுஜன பெரமுன அரசாங்கத்தினால் முறையற்ற வகையில், பொறுத்தமற்ற சூழ்நிலையில் உருவாக்கப்பட்ட பொதுக் கொள்கைகளின் விளைவுகளானது அரசியல் முறைமை உள்ளடங்களாக நாட்டின் அனைத்து துறைகளையும் நெருக்கடிக்கு தள்ளியுள்ளமை புலனாகின்றன. இவ்வாய்வின் படி பொதுஜன பெரமுன அரசாங்கத்தினால் எவ்வாறான பொதுக் கொள்கைகள் உருவாக்கப்பட்டன, பொதுக் கொள்கையில் எவ்வாறான விடயங்கள் தாக்கத்தை செலுத்தின என்பன அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. அவ் விடயங்களை மையமாகக் கொண்டு அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட பொதுக் கொள்கைகள் தொடர்பான விடயங்களும் கலந்துரையாடப்பட்டுள்ளது. கொவிட்-19 பெருந்தொற்றின் காரணமாக ஏற்பட்ட பொருளாதார மந்தநிலை ஏற்பட்டுள்ள சூழ்நிலையில், இயற்கை விவசாயமுறையின் அறிமுகம், சில பொருட்களின் இறக்குமதிக்கான தடை, சுகாதாரச் சேவைக்கான அதிக முக்கியத்துவம் போன்ற விடயங்களில் பொதுக்கொள்கைகளை வகுக்கின்ற போது நடைமுறை சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு, அதனுடைய விளைவுகளை நன்கு ஆராய்ந்து கொள்கைகளை நடைமுறைப்படுத்துவது அரசாங்கத்திற்கும், நாட்டு மக்களுக்கும் ஆரோக்கியம் தரக்கூடிய விடயமாக அமையும் என்பது இவ்வாய்வினூடாக அறிந்துக் கொள்ளக் கூடியதாகவுள்ளது. அதனோடு நிர்வாக அதிகாரங்களை கொண்டு பலம் பொருந்திய அரசாக இருந்தாலும் அதனுடைய கொள்கை தவருகின்ற போது அந்த அரசாங்கத்தை தகர்த்தெறிவதற்கு மக்களும் தயாராக இருப்பார்கள் என்ற விடயமும் புலனாகின்றது. இதன் அடிப்படையில் பொது நன்மையினை ஏற்படுத்தும் கொள்கைகளை உருவாக்க வேண்டியது ஆட்சிபீடம் ஏறுகின்ற அரசாங்கங்களின் மிக முக்கிய கடமையாக அடையாளப்படுத்த முடியும்.

**உசாத்துணைகள்**

Adaderana. (2022, August 24), இலங்கை செலுத்த வேண்டிய கடன் தொகை எவ்வளவு தெரியுமா?, Retrieved January 5, 2023, from: https://tamil.adaderana.lk/news.php?nid=164880.

Adaderana.(2022,may 12), Ranil Wickremesinghe sworn in as new Prime Minister. Retrieved January 5, 2023, from: http://www.adaderana.lk/news/82388/ranil-wickremesinghe-sworn-in-as-new-prime-minister.

Aljazeera. (2022, may 09). Sri Lanka PM Mahinda Rajapaksa resigns as crisis worsens. Retrieved January 5, 2023, from: https://www.aljazeera.com/news/2022/5/9/sri-lanka-pm-mahinda-rajapaksa-offers-to-resign-as-crisis-worsens.

Bandula Sirimanna.(2022, March 06). Restricted imports of 600 non-essentials. Retrieved December 15, 2022, from : https://www.sundaytimes.lk/220306/business-times/restricted-imports-of-600-non-essentials-474757.html.

Colombopage .(2021,April 29). President vows to make Sri Lanka the first country in the world to be free of chemical fertilizers Retrieved December 15, 2022, from http://www.colombopage.com/archive_21A/Apr29_1619712437CH.php .

Colombopage .(2021,August 16). President reshuffles Cabinet, Retrieved December 15, 2022, from: http://www.colombopage.com/archive_21B/Aug16_1629099284CH.php.

Dailynews .(2022, March 03). Cabinet reshuffle : Several Ministers changed, Retrieved December 15, 2022, from: https://www.dailynews.lk/2022/03/03/local/274025/cabinet-reshuffle-several-ministers-changed.

DRI. (2021, July 19). Covid-19 and Sri Lanka's 2020 parliamentary elections , Retrieved December 19, 2022, from: https://democracy-reporting.org/en/office/sri-lanka/publications/covid-19-and-sri-lankas-2020-parliamentary-elections.

Economynext .(2022, November 03). Crisis hit srilanka reveals foreign debt details owes 35 bln in total 7 bln to china, Retrieved December 19, 2022, from: http://www.economynext.com/crisis-hit-sri-lanka-reveals-foreign-debt-details-owes-35-bln-in-total-7-bln-to-china-101892/.

Godwin Constantine. (2022, May 13), The Galle Face Struggle & Its Importance, Retrieved December 19, 2022, from: https://www.colombotelegraph.com/index.php/the-galle-face-struggle-its-importance/.

Hindustantimes.(2022, july 22). Dinesh Gunawardena sworn in as Sri Lanka's new PM. Retrieved December 19, 2022, from: https://www.hindustantimes.com/world-news/dinesh-gunawardena-sworn-in-as-sri-lanka-s-new-pm-101658466253032.html.

LBO. (2020, August 14). Providing employment to 50,000 graduates & 100,000 low-income earners resumes. Retrieved December 22, 2022, from https://www.lankabusinessonline.com/providing-employment-to-50000-graduates-100000-low-income-earners-resumes/.

Manthri.(2021,August 16), gotameter Tracking actionable manifesto promises of Gotabaya Rajapaksa, Retrieved December 29, 2022, from: https://manthri.lk/en/gotameter.

Meera,s. (2019). Mahinda Rajapaksa sworn in as Sri Lanka Prime Minister. Retrieved December 05,2022 https://www.thehindu.com/news/international/mahinda-rajapaksa-becomes-lankas-new-prime-minister/article61616191.ece.

Rameez, A. (2020). Rise of Sri Lanka Podujana Peramuna (SLPP): Causes, Consequences and Challenges. KALAM - International Research Journal Faculty of Arts and Culture, South Eastern University of Sri Lanka, 13(1), 2020.

Richard Asquith. (2019). Sri Lanka cuts VAT from 15% to 8%. Retrieved December 05,2022 https://www.avalara.com/vatlive/en/vat-news/sri-lanka-cuts-vat-from-15--to-8-.html.

Science Speaks.(2022, November 09). Impacts of the 2021 Ban on Conventional Pesticides and Fertilizers in Sri Lanka. Retrieved January 10, 2023, from : https://www.isaaa.org/blog/entry/default.asp?BlogDate=11/9/2022.

Skandha Gunasekara.(2022, July 14). Sri Lanka's President Resigns After Months of Protest. Retrieved January 11, 2023, from: https://www.nytimes.com/2022/07/14/world/asia/sri-lanka-president-rajapaksa-resigns-protests.html.

TamilTwin. (2020, September 03). அரச சேவையில் 50,177 பட்டதாரிகள். Retrieved January 11, 2023, from https://www.tamiltwin.com/50-177-graduates-joined-the-public-service-today-gotabaya-rajapaksa-presidents-office-sri-lanka-news/.

Thehindu.(2022, July 21). Sri Lanka's newly elected President Ranil Wickremesinghe sworn in . Retrieved January 12, 2023, from: https://www.thehindu.com/news/international/sri-lankas-newly-elected-president-ranil-wickremesinghe-sworn-into-office/article65665238.ece.

wsws.(2021,July 22), இலங்கை விவசாயிகளின் போராட்டத்திற்கு ஒரு சோசலிச வேலைத்திட்டம், Retrieved January 09, 2023, from : https://www.wsws.org/ta/articles/2021/07/22/farm-j22.html.

Yamei, Wang. (2020 March 18). Sri Lanka Launches National Operation Centre to Fight Covid-19. Xinhua, Retrieved January 13, 2023, from: http://www.xinhuanet.com/english/2020-03/18/c_138892016.html.

Zulfick Farzan . (2022, May 23). Sri Lanka: More Cabinet Ministers appointed. Retrieved January 14, 2023, from: https://www.newsfirst.lk/2022/05/23/sri-lanka-more-cabinet-ministers-appointed/.

மோகனதாஸ், அ. (2014). அரசியல் மூலதத்துவங்கள். ஒமேகா வெயியீடு.